**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 261/2023**

**PROSECUTION WITNESS NO.2**

| | | |
|---|---|---|
| **Name** | : முகமது ஹனிபா | **Caste** : |
| **Father's/Husband Name :** | ஜாஹீர் ஹீசைன் | **Religion : Muslim** |
| **Village** | : சக்கரப்பள்ளி, அய்யம்பேட்டை | **Calling** : ஓட்டுநர் |
| **Taluk** | : பாபநாசம் | **Age : 26/2023** |

**(Accused Present.)**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.12.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு** 3, **திருமதி. ர.நித்யா,** தட்டச்சர்

**<u>C.C.No. 261/2023 20.12.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.47**

**முதல் விசாரணை:**

**1.**நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ. சா. 1 சதாம் ஹீசைன் எனது தம்பி ஆவார். கடந்த 20.05.2023 ஆம் தேதி ஈஸ்வரி நகரில் வேலை முடித்து விட்டு எனது அம்மா பெயரிலுள்ள Honda Dream TN 68M0185 என்ற இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வரும் வழியில் பாஸ்போர்ட் அலுவலத்திற்கு எதிரேயுள்ள மதுபானக் கடையில் மதுபானம் அருந்தி கொண்டிருந்தார். அப்போது என் தம்பிக்கு அறிமுகமில்லாத ஒரு நபர் என் தம்பியுடன் பேசி பழகி மது அருந்திவிட்டு ராயல் சிட்டி SNM நகரில் இருவரும் மீண்டும் மது அருந்தி கொண்டிருந்தார்கள். அப்போது சதாம் ஹீசைன் மயக்கம் ஆகி படுத்துவிட்டார். அந்த அறிமுகமில்லாத நபர் எனது தம்பியின் இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு சென்றுவிட்டார். எங்களிடம் சொன்னால் நாங்கள் திட்டுவோம் என்றும் காவல் நிலையத்தில் புகார் அளிக்காமலும் இருசக்கர வாகனத்தை தேடி கொண்டிருந்தார். பின்னர் 31.05.2023 ம் தேதி பகல் 12.30 மணியளவில் நானும் எனது தம்பியும் இரயிலடியிலிருந்து பழைய பேருந்து நிலையம் செல்லும் வழியில் LIC அலுவலகம் முன்பாக ஒரு சிவப்பு நிற இருசக்கர வாகனம் நின்று கொண்டிருந்தது. எங்கள் வண்டி தானா என்று அருகில் சென்று பார்த்தபோது ஒரு நபர் வண்டி அருகில் வந்தார். அவரிடம் விசாரிக்க சென்றபோது அந்த நபர் ஓட முயற்சித்தார்.

**C.C.No. 261/2023**

நானும் எனது தம்பியும் அந்த நபரை விரட்டி பிடித்து தஞ்சாவூர் கீழ வாசல் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். அந்த நபர் ஆஜர் எதிரி ஆவார். எனது தம்பி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

**2.'நான் முதல் விசாரணையில் கூறியுள்ள** 'அ. சா. 1 சதாம் ஹீசைன் எனது தம்பி ஆவார். கடந்த 20.05.2023 ஆம் தேதி ஈஸ்வரி நகரில் வேலை முடித்து விட்டு எனது அம்மா பெயரிலுள்ள Honda Dream TN 68M0185 என்ற இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு வரும் வழியில் பாஸ்போர்ட் அலுவலத்திற்கு எதிரேயுள்ள மதுபானக் கடையில் மதுபானம் அருந்தி கொண்டிருந்தார். அப்போது என் தம்பிக்கு அறிமுகமில்லாத ஒரு நபர் என் தம்பியுடன் பேசி பழகி மது அருந்திவிட்டு ராயல் சிட்டி SNM நகரில் இருவரும் மீண்டும் மது அருந்தி கொண்டிருந்தார்கள். அப்போது சதாம் ஹீசைன் மயக்கம் ஆகி படுத்துவிட்டார். அந்த அறிமுகமில்லாத நபர் எனது தம்பியின் இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு சென்றுவிட்டார். எங்களிடம் சொன்னால் நாங்கள் திட்டுவோம் என்றும் காவல் நிலையத்தில் புகார் அளிக்காமலும் இருசக்கர வாகனத்தை தேடி கொண்டிருந்தார்'.என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது தம்பி மேற்படி விவரங்களை வண்டி காணாமல் போன விவரத்தை மறுநாள் கூறினார். நானும் எனது தம்பியும் LIC அலுவலகம் அருகே வாகனத்தில் சென்றோம். LIC அலுவலகம் மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதி என்றால் சரிதான். நான் எங்கள் வாகனத்திற்கு அருகே சென்றபோது கூட்டம் கூடவில்லை. இரயிலடி நோக்கி ஓடியவரை நாங்கள் LIC அலுவலகம் முன்பு பிடித்தோம். எங்களது காணாமல் போன வண்டி LIC அலுவலக வாசலில் நின்றது. எதிரி 10 அடி ஓடுவதற்குள் பிடித்து விட்டோம். நாங்கள் ஓடி சென்று பிடித்த போது மக்கள் கூடிவிட்டார்களா என்றால் இல்லை. நானும் அ.சா. 1 ம் சேர்ந்து ஓடிச்சென்று எதிரியை பிடித்தோம். நாங்கள் வந்த வாகனத்தையும் LIC அலுவலக வாசல் முன்பு நிறுத்திவிட்டோம். அப்போது போலீசார் அங்கு வந்துவிட்டார்களா என்றால் இல்லை. காணாமல் போன வண்டியை எனது தம்பி காவல் நிலையம் சென்றார். நானும் எதிரியும் எனது வண்டியில் போனோம். எனது வண்டியை நான்தான் ஓட்டி சென்றேன்.

C.C.No. 261/2023

3.எதிரி எனது வண்டியிலிருந்து தப்பிக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையம் செல்வதை அறிந்து எதிரி வண்டியில் வந்தார் என்றால் சரிதான். புகாரை அ.சா. 1 தான் எழுதினார். நாங்கள் பகல் 12.45 மணியளவில் காவல் நிலையம் சென்றோம். எங்களுடன் வேறு யாரும் வரவில்லை. போலீசார் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அ.சா. 1 எனது தம்பி என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்காக அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிகின்றேன் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.